# MATHEMATICS
# கணிதம்
## Class / வகுப்பு - VIII
## Semester - I

## CONTENTS / பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| Chapter 1 | Rational Numbers | |
| அத்தியாயம் 1 | விகிதமுறு எண்கள் | 2 - 41 |
| Chapter 2 | Linear Equation with One Variable | |
| அத்தியாயம் 2 | ஒரு மாறியில் நேரிய சமன்பாடுகள் | 42 - 73 |
| Chapter 3 | Understanding Quadrilaterals | |
| அத்தியாயம் 3 | நாற்கரங்களை புரிந்துக்கொள்ளல் | 74 - 113 |
| Chapter 4 | Practical Geometry | |
| அத்தியாயம் 4 | செய்முறை வடிவியல் | 114 - 137 |
| Chapter 5 | Data Handling | |
| அத்தியாயம் 5 | விவரங்களை கையாளுதல் | 138 - 177 |
| Chapter 6 | Squares and Square Roots | |
| அத்தியாயம் 6 | வர்க்கங்கள் மற்றும் வர்க்கமூலங்கள் | 178 - 217 |
| Chapter 7 | Cubes and Cube Roots | |
| அத்தியாயம் 7 | கனங்கள் மற்றும் கனமூலங்கள் | 218 - 233 |
| Chapter 8 | Comparing Quantities | |
| அத்தியாயம் 8 | அளவுகளை ஒப்பிடுதல் | 218 - 233 |
| | Answers | |
| | விடைகள் | 272 - 288 |


K3Z9B3

Teacher Corner

V6F6R8

Student Corner

# Rational Numbers

CHAPTER 1

0852CH01

## 1.1 Introduction

In Mathematics, we frequently come across simple equations to be solved. For example, the equation

$$x + 2 = 13 \qquad (1)$$

is solved when $x = 11$, because this value of $x$ satisfies the given equation. The solution 11 is a **natural number**. On the other hand, for the equation

$$x + 5 = 5 \qquad (2)$$

the solution gives the **whole number** 0 (zero). If we consider only natural numbers, equation (2) cannot be solved. To solve equations like (2), we added the number zero to the collection of natural numbers and obtained the whole numbers. Even whole numbers will not be sufficient to solve equations of type

$$x + 18 = 5 \qquad (3)$$

Do you see 'why'? We require the number –13 which is not a whole number. This led us to think of **integers, (positive and negative)**. Note that the positive integers correspond to natural numbers. One may think that we have enough numbers to solve all simple equations with the available list of integers. Now consider the equations

$$2x = 3 \qquad (4)$$

$$5x + 7 = 0 \qquad (5)$$

for which we cannot find a solution from the integers. (Check this)

We need the numbers $\frac{3}{2}$ to solve equation (4) and $\frac{-7}{5}$ to solve equation (5). This leads us to the collection of **rational numbers**.



We have already seen basic operations on rational numbers. We now try to explore some properties of operations on the different types of numbers seen so far.

# விகிதமுறு எண்கள்

அத்தியாயம் 1

F6H2H9

## 1. 1 அறிமுகம்

கணிதத்தில் எளிய சமன்பாடுகளை நாம் அடிக்கடி தீர்க்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக சமன்பாடு

$$x + 2 = 13 \qquad (1)$$

$x = 11$ எனும்போது தீர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் $x$ ன் இந்த மதிப்பு கொடுக்கப்பட்ட சமன்பாட்டை திருப்திப்படுத்துகிறது. தீர்வு 11 என்பது ஒரு இயல்எண். மற்றொரு சமன்பாட்டை கவனி.

$$x + 5 = 5 \qquad (2)$$

இதன் தீர்வு முழு எண்ணை தருகிறது 0 (பூஜ்ஜியம்). இயல் எண்களை மட்டும் எடுத்துக் கொண்டால் சமன்பாடு 2 ஐ தீர்க்க முடியாது. சமன்பாடு(2) ஐ தீர்க்க வேண்டுமானால் இயல எண்களின் தொகுப்புடன் பூஜ்ஜியத்தை சேர்க்கும்போது முழு எண்களை பெறலாம். கீழுள்ள சமன்பாட்டை தீர்க்க முழு எண்கள் கூட போதுமானதாக இருப்பதில்லை.

$$x + 18 = 5 \qquad (3)$$

இதை பார்த்தீர்களா? நமக்குத் தேவையான எண் $-13$ ஏன்? இது முழு எண் அல்ல. இது முழுக்களைப்பற்றி சிந்திக்க வைக்கிறது. (மிகை மற்றும் குறை) மிகை முழுக்கள் இயல் எண்களுடன் ஒத்துப்போகின்றன என்பதை நினைவில் கொள்ளவும். முழுக்களை மட்டுமே கொண்டு அனைத்து எளிய சமன்பாடுகளையும் தீர்க்க போதுமான எண்கள் நம்மிடம் உள்ளதாக நினைத்துக் கொள்ளலாமா? இந்த சமன்பாட்டை கவனியுங்கள்.

$$2x = 3 \qquad (4)$$

$$5x + 7 = 0 \qquad (5)$$

முழுக்களிலிருந்து இதற்கான தீர்வை நம்மால் கண்டறிய முடியாது. (இதை சோதிக்கவும்)

சமன்பாடு (4)ஐ தீர்க்க $\frac{3}{2}$ என்ற எண்ணும் சமன்பாடு(5)ஐ தீர்க்க $\frac{-7}{5}$ என்ற எண்ணும் தேவைப்படுகிறது. இது விகிதமுறு எண்களின் தொகுப்பிற்கு வழிவகுக்கிறது.



நாம் ஏற்கனவே விகிதமுறு எண்களின் மீது அடிப்படை செயல்களை செய்து இருக்கிறோம். இப்போது நாம் பல்வேறு வகையான எணகளின் மீது சில செயல்களின் பண்புகளைப் பற்றி ஆய்வு செய்வோம்.

## 1.2 Properties of Rational Numbers

### 1.2.1 Closure

**(i) Whole numbers**

Let us revisit the closure property for all the operations on whole numbers in brief.



| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | 0 + 5 = 5, a whole number<br>4 + 7 = ... . Is it a whole number?<br>In general, $a + b$ is a whole number for any two whole numbers $a$ and $b$. | Whole numbers are closed under addition. |
| Subtraction | 5 – 7 = – 2, which is not a whole number. | Whole numbers are **not** closed under subtraction. |
| Multiplication | 0 × 3 = 0, a whole number<br>3 × 7 = ... . Is it a whole number?<br>In general, if $a$ and $b$ are any two whole numbers, their product $ab$ is a whole number. | Whole numbers are closed under multiplication. |
| Division | $5 \div 8 = \frac{5}{8}$, which is not a whole number. | Whole numbers are **not** closed under division. |

Check for closure property under all the four operations for natural numbers.

**(ii) Integers**

Let us now recall the operations under which integers are closed.

| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | – 6 + 5 = – 1, an integer<br>Is – 7 + (–5) an integer?<br>Is 8 + 5 an integer?<br>In general, $a + b$ is an integer for any two integers $a$ and $b$. | Integers are closed under addition. |
| Subtraction | 7 – 5 = 2, an integer<br>Is 5 – 7 an integer?<br>– 6 – 8 = – 14, an integer | Integers are closed under subtraction. |

## 1. 2 விகிதமுறு எண்களின் பண்புகள்

### 1.2.1 அடைவுப்பண்பு

**(i) முழுஎண்கள்**

முழுஎண்களில் அடைவுப்பண்பின் மீது அனைத்து செயல்களையும் பற்றி மீண்டும் ஒருமுறை விரிவாக பார்ப்போம்.



| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | $0 + 5 = 5$, ஒரு முழுஎண். $4 + 7 = ....$ இது ஒரு முழுஎண்ணா? பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுஎண்கள் எனில் $a + b$ ஒரு முழுஎண் ஆகும். | கூட்டலை பொறுத்து முழுஎண்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது. |
| கழித்தல் | $5 - 7 = -2$, இது ஒரு முழுஎண் அல்ல | கழித்தலை பொறுத்து முழுஎண்கள் அடைவுப்பண்பை பெற்றிருக்காது. |
| பெருக்கல் | $0 \times 3 = 0$,, ஒரு முழுஎண். $3 \times 7 = ....$ இது ஒரு முழுஎண்ணா? பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுஎண்கள் எனில் $ab$ ஒரு முழுஎண் ஆகும். | பெருக்கலை பொறுத்து முழுஎண்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது. |
| வகுத்தல் | $5 \div 8 = \frac{5}{8}$, இது ஒரு முழுஎண் அல்ல | வகுத்தலை பொறுத்து முழுஎண்கள் அடைவுப்பண்பை பெற்றிருக்காது. |

இயல் எண்கள் அனைத்தும் நான்கு வகையான செயல்களின் மீதும் அடைவுப்பண்பை பெற்றுள்ளதா என சோதிக்கவும்.

**(ii) முழுக்கள்**

எந்த செயல்களை பொருத்து முழுக்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது என்பதை நினைவு கூறுவோம்.

| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | $-6 + 5 = -1$, ஒரு முழுக்கள் $-7+(-5)$இது ஒரு முழுக்களா? $8 + 5$ ஒரு முழுவாக இருக்குமா? பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுக்கள் எனில் $a + b$ ஒரு முழுவாகும். | கூட்டலை பொறுத்து முழுக்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது. |
| கழித்தல் | $7 - 5 = 2$, ஒரு முழுக்கள் $5 - 7$ ஒரு முழுவா? $-6 - 8 = -14$, ஒரு முழுக்கள் | கழித்தலை பொறுத்து முழுக்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| | $-6-(-8)=2$, an integer<br>Is $8-(-6)$ an integer?<br>In general, for any two integers $a$ and $b$, $a-b$ is again an integer.<br>Check if $b-a$ is also an integer. | |
| Multiplication | $5\times8=40$, an integer<br>Is $-5\times8$ an integer?<br>$-5\times(-8)=40$, an integer<br>In general, for any two integers $a$ and $b$, $a\times b$ is also an integer. | Integers are closed under multiplication. |
| Division | $5\div8=\frac{5}{8}$, which is not an integer. | Integers are **not** closed under division. |



You have seen that whole numbers are closed under addition and multiplication but not under subtraction and division. However, integers are closed under addition, subtraction and multiplication but not under division.

**(iii) Rational numbers**

Recall that a number which can be written in the form $\frac{p}{q}$, where $p$ and $q$ are integers and $q\neq0$ is called a **rational number**. For example, $-\frac{2}{3}, \frac{6}{7}, \frac{9}{-5}$ are all rational numbers. Since the numbers 0, –2, 4 can be written in the form $\frac{p}{q}$, they are also rational numbers. (Check it!)

(a) You know how to add two rational numbers. Let us add a few pairs.

$$\frac{3}{8}+\frac{(-5)}{7}=\frac{21+(-40)}{56}=\frac{-19}{56}$$ (a rational number)

$$\frac{-3}{8}+\frac{(-4)}{5}=\frac{-15+(-32)}{40}=\ldots$$ Is it a rational number?

$$\frac{4}{7}+\frac{6}{11}=\ldots$$ Is it a rational number?

We find that sum of two rational numbers is again a rational number. Check it for a few more pairs of rational numbers.

We say that *rational numbers are closed under addition. That is, for any two rational numbers a and b, a + b is also a rational number.*

(b) Will the difference of two rational numbers be again a rational number?

We have,

$$\frac{-5}{7}-\frac{2}{3}=\frac{-5\times3-2\times7}{21}=\frac{-29}{21}$$ (a rational number)

| | | |
|---|---|---|
| | $-6-(-8)=2$, ஒரு முழுக்கள் $8-(-6)$ இது ஒரு முழுக்களா? பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுக்கள் எனில் $a-b$ ஒரு முழுக்களாகும். $b-a$ கூட ஒரு முழுக்களாக உள்ளதா சோதிக்கவும். | |
| பெருக்கல் | $5 \times 8 = 40$, ஒரு முழுக்கள் $-5\times 8$ ஒரு முழுக்களா? $-5\times(-8)=40$ ஒரு முழுக்கள். பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுக்கள் எனில் $a \times b$ ஒரு முழுக்களாகும். | பெருக்கலை பொறுத்து முழுக்கள் அடைவுப்பண்பை பெற்றுள்ளது. |
| வகுத்தல் | $5 \div 8 = \frac{5}{8}$, இது ஒரு முழுக்கள் அல்ல | வகுத்தலை பொறுத்து முழுக்கள் அடைவுப்பண்பை பெற்றிருக்காது. |



முழு எண்கள் கூட்டல் மற்றும் பெருக்லைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளது. ஆனால் கழித்தல் மற்றும் வகுத்தலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றிருக்காது. எனினும் முழுக்கள் கூட்டல், கழித்தல் மற்றும் பெருக்கலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளது. ஆனால் வகுத்தலைப் பொறுத்து அடைவுப்பண்பு பெற்றிருக்காது.

**(iii) விகிதமுறு எண்கள்**

$p$ மற்றும் $q$ ஆகியவை முழுக்கள் மேலும் $(q \neq 0)$ எனில் $\frac{p}{q}$ வடிவில் எழுதக்கூடிய எண்கள் விகிதமுறு எண்கள் எனப்படும்.

எடுத்துக்காட்டாக $-\frac{2}{3}, \frac{6}{7}, \frac{9}{-5}$ ஆகியவை விகிதமுறு எண்கள் ஆகும்.

$0, -2, 4$ போன்ற எண்களை $\frac{p}{q}$ வடிவில் எழுத முடியும். இவைகளும் கூட விகிதமுறு எண்களே(இவற்றை சோதிக்கவும்)

(a) இரண்டு விகிதமுறு எண்களை கூட்டுவது எவ்வாறு என்பது உங்களுக்கு தெரியும். சில விகிதமுறு எண்களின் ஜோடிகளை கூட்டல் செய்வோம்.

$$\frac{3}{8}+\frac{(-5)}{7} = \frac{21+(-40)}{56} = \frac{-19}{56} \quad \text{(ஒரு விகிதமுறு எண்)}$$

$$\frac{-3}{8}+\frac{(-4)}{5} = \frac{-15+(-32)}{40} = \ldots \quad \text{ஒரு விகிதமுறு எண்ணா?}$$

$$\frac{4}{7}+\frac{6}{11} = \ldots \quad \text{ஒரு விகிதமுறு எண்ணா?}$$

இரண்டு விகிதமுறு எண்களின் கூடுதல் மீண்டும் ஒரு விகிதமுறு எண்ணாக இருப்பதை காணலாம். மேலும் சில விகிதமுறு எண் ஜோடிகளைக் கொண்டு இதை சோதிக்கவும். விகிதமுறு எண்கள் கூட்டலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளது என நாம் கூறலாம். அதாவது $a$ மற்றும் $b$, ஆகியவை ஏதேனும் இரண்டு விகிதமுறு எண்கள் எனில் $a+b$ கூட ஒரு விகிதமுறு எண் ஆகும்.

(b) இரண்டு விகிதமுறு எண்களின் வித்தியாசம் ஒரு விகிதமுறு எண்ணா?

$$\frac{-5}{7}-\frac{2}{3}=\frac{-5\times 3-2\times 7}{21} = \frac{-29}{21} \quad \text{(ஒரு விகிதமுறு எண்)}$$

$$\frac{5}{8}-\frac{4}{5}=\frac{25-32}{40}=\ldots$$ Is it a rational number?

$$\frac{3}{7}-\left(\frac{-8}{5}\right)=\ldots$$ Is it a rational number?

Try this for some more pairs of rational numbers. We find that *rational numbers are closed under subtraction. That is, for any two rational numbers a and b, a – b is also a rational number.*

(c) Let us now see the product of two rational numbers.

$$\frac{-2}{3}\times\frac{4}{5}=\frac{-8}{15};\ \frac{3}{7}\times\frac{2}{5}=\frac{6}{35}$$ (both the products are rational numbers)

$$-\frac{4}{5}\times\frac{-6}{11}=\ldots$$ Is it a rational number?

Take some more pairs of rational numbers and check that their product is again a rational number.

We say that *rational numbers are closed under multiplication. That is, for any two rational numbers a and b, a × b is also a rational number.*

(d) We note that $\frac{-5}{3}\div\frac{2}{5}=\frac{-25}{6}$ (a rational number)

$\frac{2}{7}\div\frac{5}{3}=\ldots$ . Is it a rational number? $\frac{-3}{8}\div\frac{-2}{9}=\ldots$ . Is it a rational number?

Can you say that rational numbers are closed under division?

We find that for any rational number $a$, $a\div 0$ is **not defined**.

So rational numbers are **not closed** under division.

However, if we exclude zero then the collection of, all other rational numbers is closed under division.



## TRY THESE

Fill in the blanks in the following table.

| Numbers | Closed under | | | |
|---|---|---|---|---|
| | **addition** | **subtraction** | **multiplication** | **division** |
| Rational numbers | Yes | Yes | ... | No |
| Integers | ... | Yes | ... | No |
| Whole numbers | ... | ... | Yes | ... |
| Natural numbers | ... | No | ... | ... |

$\frac{5}{8}-\frac{4}{5}=\frac{25-32}{40}=\ldots$ ஒரு விகிதமுறு எண்ணா?

$\frac{3}{7}-\left(\frac{-8}{5}\right)=\ldots$ ஒரு விகிதமுறு எண்ணா?

மேலும் சில விகிதமுறு எண் ஜோடிகளைக் கொண்டு இதை சரிபார். விகிதமுறு எண்கள் கழித்தலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளது என நாம் காணலாம். அதாவது $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு விகிதமுறு எண்கள் எனில் $a-b$ கூட ஒரு விகிதமுறு எண் ஆகும்.

(c) இப்போது இரண்டு விகிதமுறு எண்களின் பெருக்கற்பலனை பார்க்கலாம்.

$\frac{-2}{3}\times\frac{4}{5}=\frac{-8}{15}$; $\frac{3}{7}\times\frac{2}{5}=\frac{6}{35}$ (இரண்டு பெருக்கற்பலன்களும் விகிதமுறு எண்களே)

$-\frac{4}{5}\times\frac{-6}{11}=\ldots$ ஒரு விகிதமுறு எண்ணா?

மேலும் சில விகிதமுறு எண் ஜோடிகளைக் கொண்டு இவற்றின் பெருக்கற்பலன் மீண்டும் ஒரு விகிதமுறு எண்ணை தருகிறதா என சரிபார். விகிதமுறு எண்கள் பெருக்கலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளது என கூறலாம். அதாவது $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு விகிதமுறு எண்கள் எனில் $a \times b$ கூட ஒரு விகிதமுறு எண் ஆகும்.

(d) $\frac{-5}{3}\div\frac{2}{5}=\frac{-25}{6}$ (ஒரு விகிதமுறு எண்)

$\frac{2}{7}\div\frac{5}{3}=\ldots$ . ஒரு விகிதமுறு எண்ணா?

$\frac{-3}{8}\div\frac{-2}{9}=\ldots$ . ஒரு விகிதமுறு எண்ணா?

விகிதமுறு எண்கள் வகுத்தலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றுள்ளதா?

$a$ எனும் ஏதேனும் ஒரு விகிதமுறு எண்ணுக்கு $a \div 0$ ஐ வரையறுக்க முடியாது. எனவே வகுத்தலை பொறுத்து அடைவுப்பண்பை பெற்றிருக்காது.

இருப்பினும் பூஜ்ஜியத்தை தவிர மற்ற அனைத்து விகிதமுறு எண்களும் வகுத்தலைப் பொறுத்து அடைவுப்பண்பை பெற்றிருக்கும்.



## முயன்றுபார்

பின்வரும் அட்டவணையிலுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக.

| எண்கள் | அடைவுப்பண்பை பொறுத்து | | | |
|---|---|---|---|---|
| | கூட்டல் | கழித்தல் | பெருக்கல் | வகுத்தல் |
| விகிதமுறு எண்கள் | ஆம் | ஆம் | ... | இல்லை |
| முழுக்கள் | ... | ஆம் | ... | இல்லை |
| முழுஎண்கள் | ... | ... | ஆம் | ... |
| இயல் எண்கள் | ... | இல்லை | ... | ... |

### 1.2.2 Commutativity

**(i) Whole numbers**

Recall the commutativity of different operations for whole numbers by filling the following table.

| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | $0 + 7 = 7 + 0 = 7$<br>$2 + 3 = ... + ... = ....$<br>For any two whole numbers $a$ and $b$,<br>$a + b = b + a$ | Addition is commutative. |
| Subtraction | ......... | Subtraction is not commutative. |
| Multiplication | ......... | Multiplication is commutative. |
| Division | ......... | Division is not commutative. |



Check whether the commutativity of the operations hold for natural numbers also.

**(ii) Integers**

Fill in the following table and check the commutativity of different operations for integers:

| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | ......... | Addition is commutative. |
| Subtraction | Is $5 - (-3) = -3 - 5$? | Subtraction is not commutative. |
| Multiplication | ......... | Multiplication is commutative. |
| Division | ......... | Division is not commutative. |

**(iii) Rational numbers**

**(a) Addition**

You know how to add two rational numbers. Let us add a few pairs here.

$$\frac{-2}{3}+\frac{5}{7}=\frac{1}{21} \text{ and } \frac{5}{7}+\left(\frac{-2}{3}\right)=\frac{1}{21}$$

So, $$\frac{-2}{3}+\frac{5}{7}=\frac{5}{7}+\left(\frac{-2}{3}\right)$$

Also, $$\frac{-6}{5}+\left(\frac{-8}{3}\right) = \dots \text{ and } \frac{-8}{3}+\left(\frac{-6}{5}\right)=\dots$$

Is $$\frac{-6}{5}+\left(\frac{-8}{3}\right)=\left(\frac{-8}{3}\right)+\left(\frac{-6}{5}\right)?$$

## 1.2.2 மாற்றுப்பண்பு

### (i) முழுஎண்கள்

பின்வரும் அட்டவணையை நிரப்புவதன் மூலம் முழுஎண்களின் மீது பல்வேறு செயல்களின் மாற்றுப்பண்பை நினைவுகூர்வோம்.



| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | $0 + 7 = 7 + 0 = 7$<br>$2 + 3 = \ldots + \ldots = \ldots.$<br>$a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு முழுஎண்கள் எனில் $a + b = b + a$ ஆகும். | கூட்டலை பொறுத்து மாற்றுப்பண்பு உள்ளது. |
| கழித்தல் | ……… | கழித்தலை பொறுத்து மாற்றுப்பண்பு இல்லை. |
| பெருக்கல் | ……… | பெருக்கலை பொறுத்து மாற்றுப்பண்பு உள்ளது. |
| வகுத்தல் | ……… | வகுத்தலை பொறுத்து மாற்றுப்பண்பு இல்லை. |

இயல்எண்கள் கூட பல்வேறு செயல்களை பொறுத்து மாற்றுப்பண்பை கொண்டுள்ளதா என சோதிக்கவும்.

### (ii) முழுக்கள்

பின்வரும் அட்டவணையை நிரப்புக மேலும் முழுக்கள் பல்வேறு செயல்களை பொறுத்து மாற்றுப்பண்பை பெற்றுள்ளதா என சரிபார்.

| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | ……… | கூட்டலை பொறுத்து மாற்றுப்பண்பு உள்ளது. |
| கழித்தல் | $5 - (-3) = -3 - 5$ ? | கழித்தலை பொறுத்து மாற்றுப்பண்பு இல்லை. |
| பெருக்கல் | ……… | பெருக்கலை பொறுத்து மாற்றுப்பண்பு உள்ளது. |
| வகுத்தல் | ……… | வகுத்தலை பொறுத்து மாற்றுப்பண்பு இல்லை. |

### (iii) விகிதமுறு எண்கள்

#### (a) கூட்டல்

இரண்டு விகிதமுறு எண்களை கூட்டுவது எவ்வாறு என்று உங்களுக்கு தெரியும். இங்கு ஒரு சில ஜோடிகளை கூட்டல் செய்வோம்.

$$\frac{-2}{3} + \frac{5}{7} = \frac{1}{21} \text{ மற்றும் } \frac{5}{7} + \left(\frac{-2}{3}\right) = \frac{1}{21}$$

எனவே, $\frac{-2}{3} + \frac{5}{7} = \frac{5}{7} + \left(\frac{-2}{3}\right)$

மேலும், $\frac{-6}{5} + \left(\frac{-8}{3}\right) = \ldots$ மற்றும் $\frac{-8}{3} + \left(\frac{-6}{5}\right) = \ldots$

$\frac{-6}{5} + \left(\frac{-8}{3}\right) = \left(\frac{-8}{3}\right) + \left(\frac{-6}{5}\right)$ இருக்குமா?

Is $\frac{-3}{8}+\frac{1}{7}=\frac{1}{7}+\left(\frac{-3}{8}\right)$?

You find that two *rational numbers can be added in any order. We say that addition is commutative for rational numbers. That is, for any two rational numbers a and b, a + b = b + a.*

**(b) Subtraction**

Is $\frac{2}{3}-\frac{5}{4}=\frac{5}{4}-\frac{2}{3}$?

Is $\frac{1}{2}-\frac{3}{5}=\frac{3}{5}-\frac{1}{2}$?

You will find that subtraction is not commutative for rational numbers.

Note that subtraction is not commutative for integers and integers are also rational numbers. So, subtraction will not be commutative for rational numbers too.

**(c) Multiplication**

We have, $\frac{-7}{3}\times\frac{6}{5}=\frac{-42}{15}=\frac{6}{5}\times\left(\frac{-7}{3}\right)$

Is $\frac{-8}{9}\times\left(\frac{-4}{7}\right)=\frac{-4}{7}\times\left(\frac{-8}{9}\right)$?

Check for some more such products.

You will find that *multiplication is commutative for rational numbers.*

*In general, a × b = b × a for any two rational numbers a and b.*

**(d) Division**

Is $\frac{-5}{4}\div\frac{3}{7}=\frac{3}{7}\div\left(\frac{-5}{4}\right)$?

You will find that expressions on both sides are not equal.

So division is **not commutative** for rational numbers.



**TRY THESE**

Complete the following table:

| Numbers | Commutative for | | | |
|---|---|---|---|---|
| | **addition** | **subtraction** | **multiplication** | **division** |
| Rational numbers | Yes | ... | ... | ... |
| Integers | ... | No | ... | ... |
| Whole numbers | ... | ... | Yes | ... |
| Natural numbers | ... | ... | ... | No |

$$\frac{-3}{8}+\frac{1}{7}=\frac{1}{7}+\left(\frac{-3}{8}\right)$$ இது சரியா?

இரண்டு விகிதமுறு எண்களை எந்த வரிசையில் இருந்தாலும் அவற்றை நம்மால் கூட்ட முடியும். எனவே விகிதமுறு எண்கள் கூட்டலைப் பொறுத்து மாற்றுப்பண்பை பெற்றுள்ளது என கூறலாம். அதாவது $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு விகிதமுறு எண்கள் எனில், $a+b=b+a$ ஆகும்.

**(b) கழித்தல்**

$$\frac{2}{3}-\frac{5}{4}=\frac{5}{4}-\frac{2}{3}$$ இது சரியா?

$$\frac{1}{2}-\frac{3}{5}=\frac{3}{5}-\frac{1}{2}$$ இது சரியா?

விகிதமுறு எண்கள் கழித்தலைப் பொறுத்து மாற்றுப்பண்பை பெறவில்லை என அறியலாம்.

**(c) பெருக்கல்**

இப்போது $\frac{-7}{3}\times\frac{6}{5}=\frac{-42}{15}=\frac{6}{5}\times\left(\frac{-7}{3}\right)$

மேலும் $\frac{-8}{9}\times\left(\frac{-4}{7}\right)=\frac{-4}{7}\times\left(\frac{-8}{9}\right)$ இது சரியா?

இதுபோன்று மேலும் சில பெருக்கற்பலனை சரிபார்க்கவும். விகிதமுறு எண்கள் பெருக்கலைப் பொறுத்து மாற்றுப்பண்பை பெற்றுள்ளது என அறியலாம். பொதுவாக $a$ மற்றும் $b$ ஆகியவை ஏதேனும் இரண்டு விகிதமுறு எண்கள் எனில் $a\times b=b\times a$ ஆகும்.

**(d) வகுத்தல்**

$$\frac{-5}{4}\div\frac{3}{7}=\frac{3}{7}\div\left(\frac{-5}{4}\right)$$ இது சரியா?

இங்கு இருபக்கங்களிலும் கிடைத்த கோவைகள் சமமில்லை என்பதை காணலாம். எனவே விகிதமுறு எண்கள் வகுத்தலைப் பொறுத்து மாற்றுப்பண்பு இல்லை என அறியலாம்.



**முயன்றுபார்**

பின்வரும் அட்டவணையை நிரப்புக:

| எண்கள் | மாற்றுப்பண்பு | | | |
|---|---|---|---|---|
| | கூட்டல் | கழித்தல் | பெருக்கல் | வகுத்தல் |
| விகிதமுறு எண்கள் | ஆம் | ... | ... | ... |
| முழுக்கள் | ... | இல்லை | ... | ... |
| முழுஎண்கள் | ... | ... | ஆம் | ... |
| இயல்எண்கள் | ... | ... | ... | இல்லை |

### 1.2.3 Associativity

**(i) Whole numbers**

Recall the associativity of the four operations for whole numbers through this table:

| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | ......... | Addition is associative |
| Subtraction | ......... | Subtraction is **not** associative |
| Multiplication | Is $7 \times (2 \times 5) = (7 \times 2) \times 5$?<br>Is $4 \times (6 \times 0) = (4 \times 6) \times 0$?<br>For any three whole numbers $a$, $b$ and $c$<br>$a \times (b \times c) = (a \times b) \times c$ | Multiplication is associative |
| Division | ......... | Division is **not** associative |



Fill in this table and verify the remarks given in the last column.
Check for yourself the associativity of different operations for natural numbers.

**(ii) Integers**

Associativity of the four operations for integers can be seen from this table

| Operation | Numbers | Remarks |
|---|---|---|
| Addition | Is $(-2) + [3 + (-4)]$<br>$= [(-2) + 3)] + (-4)$?<br>Is $(-6) + [(-4) + (-5)]$<br>$= [(-6) + (-4)] + (-5)$?<br>For any three integers $a$, $b$ and $c$<br>$a + (b + c) = (a + b) + c$ | Addition is associative |
| Subtraction | Is $5 - (7 - 3) = (5 - 7) - 3$? | Subtraction is **not** associative |
| Multiplication | Is $5 \times [(-7) \times (-8)$<br>$= [5 \times (-7)] \times (-8)$?<br>Is $(-4) \times [(-8) \times (-5)]$<br>$= [(-4) \times (-8)] \times (-5)$?<br>For any three integers $a$, $b$ and $c$<br>$a \times (b \times c) = (a \times b) \times c$ | Multiplication is associative |
| Division | Is $[(-10) \div 2] \div (-5)$<br>$= (-10) \div [2 \div (-5)]$? | Division is **not** associative |



### 1.2.3 சேர்ப்புப்பண்பு

#### (i) முழுஎண்கள்

பின்வரும் அட்டவணையின் மூலம் நான்கு அடிப்படை செயல்களை பொறுத்து முழுஎண்களில் சேர்ப்புப்பண்பை நினைவு கூறுவோம்.

| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | ........ | கூட்டலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளது. |
| கழித்தல் | ........ | கழித்தலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை. |
| பெருக்கல் | $7\times(2\times5)=(7\times2)\times5$ இது சரியா? $4\times(6\times0)=(4\times6)\times0$ இது சரியா? $a$, $b$ மற்றும் $c$ ஏதேனும் மூன்று முழுஎண்கள் எனில் $a\times(b\times c)=(a\times b)\times c$ | பெருக்கலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளது. |
| வகுத்தல் | ........ | வகுத்தலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை |



மேலுள்ள அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக மற்றும் கடைசி நிரல் வரிசையிலுள்ள குறிப்பை சரிபார்க்கவும்.

இயல்எண்களின் வெவ்வேறான செயல்களில் சேர்ப்புப்பண்பை நீங்களே சோதிக்கவும்.

#### (ii) முழுக்கள்

நான்கு அடிப்படை செயல்களை பொறுத்து முழுக்களின் மேல் சேர்ப்புப்பண்பை பின்வரும் அட்டவணையில் காண்போம்.

| செயல் | எண்கள் | குறிப்பு |
|---|---|---|
| கூட்டல் | $(-2)+[3+(-4)]$ $=[(-2)+3)]+(-4)$ இது சரியா? $(-6)+[(-4)+(-5)]$ $=[(-6)+(-4)]+(-5)$ இது சரியா? $a,b$ மற்றும் $c$ ஏதேனும் மூன்று முழுக்களுக்கு $a+(b+c)=(a+b)+c$ | கூட்டலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளது. |
| கழித்தல் | | கழித்தலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை |
| பெருக்கல் | $5-(7-3)=(5-7)-3$ இது சரியா? $5\times[(-7)\times(-8)]$ $=[5\times(-7)]\times(-8)$ இது சரியா? $(-4)\times[(-8)\times(-5)]$ $=[(-4)\times(-8)]\times(-5)$இது சரியா? $a,b$ மற்றும் $c$ ஏதேனும் மூன்று முழுக்களுக்கு$a\times(b\times c)=(a\times b)\times c$ | பெருக்கலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளது. |
| வகுத்தல் | $[(-10)\div2]\div(-5)$ $=(-10)\div[2\div(-5)]$ இது சரியா? | வகுத்தலை பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை |



**(iii) Rational numbers**

**(a) Addition**

We have $\frac{-2}{3}+\left[\frac{3}{5}+\left(\frac{-5}{6}\right)\right]=\frac{-2}{3}+\left(\frac{-7}{30}\right)=\frac{-27}{30}=\frac{-9}{10}$

$$\left[\frac{-2}{3}+\frac{3}{5}\right]+\left(\frac{-5}{6}\right)=\frac{-1}{15}+\left(\frac{-5}{6}\right)=\frac{-27}{30}=\frac{-9}{10}$$

So, $\frac{-2}{3}+\left[\frac{3}{5}+\left(\frac{-5}{6}\right)\right]=\left[\frac{-2}{3}+\frac{3}{5}\right]+\left(\frac{-5}{6}\right)$

Find $\frac{-1}{2}+\left[\frac{3}{7}+\left(\frac{-4}{3}\right)\right]$ and $\left[\frac{-1}{2}+\frac{3}{7}\right]+\left(\frac{-4}{3}\right)$. Are the two sums equal?

Take some more rational numbers, add them as above and see if the two sums are equal. We find that *addition is associative for rational numbers. That is, for any three rational numbers a, b* and *c*, $a+(b+c)=(a+b)+c$.

**(b) Subtraction**

You already know that subtraction is not associative for integers, then what about rational numbers.



Is $\frac{-2}{3}-\left[\frac{-4}{5}-\frac{1}{2}\right]=\left[\frac{2}{3}-\left(\frac{-4}{5}\right)\right]-\frac{1}{2}$?

Check for yourself.

Subtraction is **not associative** for rational numbers.

**(c) Multiplication**

Let us check the associativity for multiplication.

$$\frac{-7}{3}\times\left(\frac{5}{4}\times\frac{2}{9}\right)=\frac{-7}{3}\times\frac{10}{36}=\frac{-70}{108}=\frac{-35}{54}$$

$$\left(\frac{-7}{3}\times\frac{5}{4}\right)\times\frac{2}{9}=\ldots$$

We find that $\frac{-7}{3}\times\left(\frac{5}{4}\times\frac{2}{9}\right)=\left(\frac{-7}{3}\times\frac{5}{4}\right)\times\frac{2}{9}$

Is $\frac{2}{3}\times\left(\frac{-6}{7}\times\frac{4}{5}\right)=\left(\frac{2}{3}\times\frac{-6}{7}\right)\times\frac{4}{5}$?

Take some more rational numbers and check for yourself.

We observe that *multiplication is associative for rational numbers. That is for any three rational numbers a, b* and *c*, $a\times(b\times c)=(a\times b)\times c$.

**(iii) விகிதமுறு எண்கள்**

**(a) கூட்டல்**

நாம் பெறுவது $\frac{-2}{3}+\left[\frac{3}{5}+\left(\frac{-5}{6}\right)\right]=\frac{-2}{3}+\left(\frac{-7}{30}\right)=\frac{-27}{30}=\frac{-9}{10}$

$$\left[\frac{-2}{3}+\frac{3}{5}\right]+\left(\frac{-5}{6}\right)=\frac{-1}{15}+\left(\frac{-5}{6}\right)=\frac{-27}{30}=\frac{-9}{10}$$

எனவே $\frac{-2}{3}+\left[\frac{3}{5}+\left(\frac{-5}{6}\right)\right]=\left[\frac{-2}{3}+\frac{3}{5}\right]+\left(\frac{-5}{6}\right)$

$\frac{-1}{2}+\left[\frac{3}{7}+\left(\frac{-4}{3}\right)\right]$ மற்றும் $\left[\frac{-1}{2}+\frac{3}{7}\right]+\left(\frac{-4}{3}\right)$ இரண்டின் கூடுதல் சமமா? கண்டுபிடி.

மேலும் சில விகிதமுறு எண்களை எடுத்துக்கொண்டு மேலே காட்டியவாறு கூட்டவும். இரண்டின் கூடுதல் சமமாக இருப்பதை பார்க்கவும். விகிதமுறு எண்கள் கூட்டலைப் பொறுத்தது சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளதை காணலாம். அதாவது $a$, $b$ மற்றும் $c$ ஏதேனும் மூன்று விகிதமுறு எண்களுக்கு $a+(b+c)=(a+b)+c$.

**(b) கழித்தல்**

முழுக்கள் கழித்தலைப் பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை என்பது உங்களுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் விகிதமுறு எண்களை பொறுத்து எப்படி இருக்கும்?



$\frac{-2}{3}-\left[\frac{-4}{5}-\frac{1}{2}\right]=\left[\frac{2}{3}-\left(\frac{-4}{5}\right)\right]-\frac{1}{2}$ இது சரியா?

நீங்களே சோதிக்கவும். கழித்தலைப் பொறுத்து சேர்ப்புப்பண்பை பெற்றிருக்காது.

**(c) பெருக்கல்**

பெருக்கலின் சேர்ப்புப்பண்பை சோதிக்கவும்.

$$\frac{-7}{3}\times\left(\frac{5}{4}\times\frac{2}{9}\right)=\frac{-7}{3}\times\frac{10}{36}=\frac{-70}{108}=\frac{-35}{54}$$

$$\left(\frac{-7}{3}\times\frac{5}{4}\right)\times\frac{2}{9}=\ldots$$

$\frac{-7}{3}\times\left(\frac{5}{4}\times\frac{2}{9}\right)=\left(\frac{-7}{3}\times\frac{5}{4}\right)\times\frac{2}{9}$ நாம் கண்டறிவோம்.

$\frac{2}{3}\times\left(\frac{-6}{7}\times\frac{4}{5}\right)=\left(\frac{2}{3}\times\frac{-6}{7}\right)\times\frac{4}{5}$ இது சரியா?

மேலும் சில விகிதமுறு எண்களை எடுத்துக்கொண்டு நீங்களே சோதிக்கவும். விகிதமுறு எண்கள் பெருக்கலைப் பொறுத்தது சேர்ப்புப்பண்பு பெற்றுள்ளதை காணலாம். அதாவது $a$, $b$ மற்றும் $c$ ஏதேனும் மூன்று விகிதமுறு எண்களுக்கு $a\times(b\times c)=(a\times b)\times c$.

**(d) Division**

Recall that division is not associative for integers, then what about rational numbers?

Let us see if $\frac{1}{2} \div \left[\frac{-1}{3} \div \frac{2}{5}\right] = \left[\frac{1}{2} \div \left(\frac{-1}{3}\right)\right] \div \frac{2}{5}$

We have, LHS $= \frac{1}{2} \div \left(\frac{-1}{3} \div \frac{2}{5}\right) = \frac{1}{2} \div \left(\frac{-1}{3} \times \frac{5}{2}\right)$ (reciprocal of $\frac{2}{5}$ is $\frac{5}{2}$)

$= \frac{1}{2} \div \left(-\frac{5}{6}\right) = \ldots$



RHS $= \left[\frac{1}{2} \div \left(\frac{-1}{3}\right)\right] \div \frac{2}{5}$

$= \left(\frac{1}{2} \times \frac{-3}{1}\right) \div \frac{2}{5} = \frac{-3}{2} \div \frac{2}{5} = \ldots$

Is LHS = RHS? Check for yourself. You will find that division is **not associative** for rational numbers.

## TRY THESE



Complete the following table:

| Numbers | Associative for | | | |
|---|---|---|---|---|
| | **addition** | **subtraction** | **multiplication** | **division** |
| Rational numbers | ... | ... | ... | No |
| Integers | ... | ... | Yes | ... |
| Whole numbers | Yes | ... | ... | ... |
| Natural numbers | ... | No | ... | ... |

**Example 1:** Find $\frac{3}{7} + \left(\frac{-6}{11}\right) + \left(\frac{-8}{21}\right) + \left(\frac{5}{22}\right)$

**Solution:** $\frac{3}{7} + \left(\frac{-6}{11}\right) + \left(\frac{-8}{21}\right) + \left(\frac{5}{22}\right)$

$= \frac{198}{462} + \left(\frac{-252}{462}\right) + \left(\frac{-176}{462}\right) + \left(\frac{105}{462}\right)$ (Note that 462 is the LCM of 7, 11, 21 and 22)

$= \frac{198 - 252 - 176 + 105}{462} = \frac{-125}{462}$

**(d) வகுத்தல்**

முழுக்கள் வகுத்தலைப் பொறுத்து சேர்ப்புப்பண்பு பெறவில்லை என்பதை நினைவு கூறுவோம். ஆனால் விகிதமுறு எண்களை பொறுத்து எப்படி இருக்கும்?

$\frac{1}{2} \div \left[\frac{-1}{3} \div \frac{2}{5}\right] = \left[\frac{1}{2} \div \left(\frac{-1}{3}\right)\right] \div \frac{2}{5}$ ஐ கவனி.

நாம் பெறுவது LHS $= \frac{1}{2} \div \left(\frac{-1}{3} \div \frac{2}{5}\right) = \frac{1}{2} \div \left(\frac{-1}{3} \times \frac{5}{2}\right)$ ($\frac{2}{5}$ ன் தலைகீழி $\frac{5}{2}$)

$= \frac{1}{2} \div \left(-\frac{5}{6}\right) = \ldots$



RHS $= \left[\frac{1}{2} \div \left(\frac{-1}{3}\right)\right] \div \frac{2}{5} = \left(\frac{1}{2} \times \frac{-3}{1}\right) \div \frac{2}{5} = \frac{-3}{2} \div \frac{2}{5} = \ldots$

LHS = RHS சரியா? நீங்களே சரிபார்க்கவும். விகிதமுறு எண்கள் வகுத்தலை பொறுத்து சேர்ப்புப்பண்பை பெறவில்லை என்பதை காணலாம்.

## முயன்றுபார்



பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எண்கள் | சேர்ப்புப்பண்பின் கீழ் | | | |
|---|---|---|---|---|
| | கூட்டல் | கழித்தல் | பெருக்கல் | வகுத்தல் |
| விகிதமுறு எண்கள் | ... | ... | ... | இல்லை |
| முழுக்கள் | ... | ... | ஆம் | ... |
| முழுஎண்கள் | ஆம் | ... | ... | ... |
| இயல்எண்கள் | ... | இல்லை | ... | ... |

**எடுத்துக்காட்டு 1 :** $\frac{3}{7} + \left(\frac{-6}{11}\right) + \left(\frac{-8}{21}\right) + \left(\frac{5}{22}\right)$ கண்டுபிடி

**தீர்வு** : $\frac{3}{7} + \left(\frac{-6}{11}\right) + \left(\frac{-8}{21}\right) + \left(\frac{5}{22}\right)$

$= \frac{198}{462} + \left(\frac{-252}{462}\right) + \left(\frac{-176}{462}\right) + \left(\frac{105}{462}\right)$ (7, 11, 21 மற்றும் 22 மி.சி.ம 462)

$= \frac{198 - 252 - 176 + 105}{462} = \frac{-125}{462}$

We can also solve it as.

$$\frac{3}{7}+\left(\frac{-6}{11}\right)+\left(\frac{-8}{21}\right)+\frac{5}{22}$$

$$=\left[\frac{3}{7}+\left(\frac{-8}{21}\right)\right]+\left[\frac{-6}{11}+\frac{5}{22}\right] \quad \text{(by using commutativity and associativity)}$$

$$=\left[\frac{9+(-8)}{21}\right]+\left[\frac{-12+5}{22}\right] \quad \text{(LCM of 7 and 21 is 21; LCM of 11 and 22 is 22)}$$

$$=\frac{1}{21}+\left(\frac{-7}{22}\right)=\frac{22-147}{462}=\frac{-125}{462}$$

Do you think the properties of commutativity and associativity made the calculations easier?

**Example 2:** Find $\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$

**Solution:** We have

$$\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$$

$$=\left(-\frac{4\times3}{5\times7}\right)\times\left(\frac{15\times(-14)}{16\times9}\right)$$

$$=\frac{-12}{35}\times\left(\frac{-35}{24}\right)=\frac{-12\times(-35)}{35\times24}=\frac{1}{2}$$



We can also do it as.

$$\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$$

$$=\left(\frac{-4}{5}\times\frac{15}{16}\right)\times\left[\frac{3}{7}\times\left(\frac{-14}{9}\right)\right] \quad \text{(Using commutativity and associativity)}$$

$$=\frac{-3}{4}\times\left(\frac{-2}{3}\right)=\frac{1}{2}$$

### 1.2.4 The role of zero (0)

Look at the following.

$2 + 0 = 0 + 2 = 2$ (Addition of 0 to a whole number)

$-5 + 0 = \ldots + \ldots = -5$ (Addition of 0 to an integer)

$\frac{-2}{7} + \ldots = 0 + \left(\frac{-2}{7}\right) = \frac{-2}{7}$ (Addition of 0 to a rational number)

இவ்வாறே கீழ்உள்ளவற்றையும் தீர்க்கலாம்.

$$\frac{3}{7}+\left(\frac{-6}{11}\right)+\left(\frac{-8}{21}\right)+\frac{5}{22}$$

$$=\left[\frac{3}{7}+\left(\frac{-8}{21}\right)\right]+\left[\frac{-6}{11}+\frac{5}{22}\right]$$ (மாற்றுப்பண்பு மற்றும் சேர்ப்புப்பண்புகளை பயன்படுத்தினால்)

$$=\left[\frac{9+(-8)}{21}\right]+\left[\frac{-12+5}{22}\right]$$ (7, 21ன் மீ.சி.ம 21; 11, 22ன் மீ.சி.ம 22)

$$=\frac{1}{21}+\left(\frac{-7}{22}\right)=\frac{22-147}{462}=\frac{-125}{462}$$

மாற்றுப்பண்பு மற்றும் சேர்ப்புப்பண்புகள் இந்த கணக்கீட்டை எளிதாக்குகின்றன என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**எடுத்துக்காட்டு 2 :** $\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$ கண்டுபிடி.

**தீர்வு :**



$$\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$$

$$=\left(-\frac{4\times 3}{5\times 7}\right)\times\left(\frac{15\times(-14)}{16\times 9}\right)$$

$$=\frac{-12}{35}\times\left(\frac{-35}{24}\right)=\frac{-12\times(-35)}{35\times 24}=\frac{1}{2}$$

இவ்வாறே கீழுள்ளவற்றையும் செய்யலாம்.

$$\frac{-4}{5}\times\frac{3}{7}\times\frac{15}{16}\times\left(\frac{-14}{9}\right)$$

$$=\left(\frac{-4}{5}\times\frac{15}{16}\right)\times\left[\frac{3}{7}\times\left(\frac{-14}{9}\right)\right]$$ (மாற்றுப்பண்பு மற்றும் சேர்ப்புப்பண்புகளை பயன்படுத்தினால்)

$$=\frac{-3}{4}\times\left(\frac{-2}{3}\right)=\frac{1}{2}$$

## 1.2.4 பூஜ்ஜியத்தின் பங்கு (0)

பின்வருவனவற்றை கவனி.

$2+0=0+2=2$ (ஒரு முழுஎண்ணுடன் 0ஐ கூட்டினால்)

$-5+0=\ldots+\ldots=-5$ (ஒரு முழுவுடன் 0ஐ கூட்டினால்)

$\frac{-2}{7}+\ldots=\quad 0+\left(\frac{-2}{7}\right)=\frac{-2}{7}$ (ஒரு விகிதமுறு எண்ணுடன் 0ஐ கூட்டினால்)

You have done such additions earlier also. Do a few more such additions.

What do you observe? You will find that when you add 0 to a whole number, the sum is again that whole number. This happens for integers and rational numbers also.

In general, $a + 0 = 0 + a = a$, where $a$ is a whole number

$b + 0 = 0 + b = b$, where $b$ is an integer

$c + 0 = 0 + c = c$, where $c$ is a rational number

*Zero is called the identity for the addition of rational numbers. It is the additive identity for integers and whole numbers as well.*

### 1.2.5 The role of 1

We have,

$$5 \times 1 = 5 = 1 \times 5 \qquad \text{(Multiplication of 1 with a whole number)}$$

$$\frac{-2}{7} \times 1 = \ldots \times \ldots = \frac{-2}{7}$$

$$\frac{3}{8} \times \ldots = 1 \times \frac{3}{8} = \frac{3}{8}$$

What do you find?

You will find that when you multiply any rational number with 1, you get back the same rational number as the product. Check this for a few more rational numbers. You will find that, $a \times 1 = 1 \times a = a$ for any rational number $a$.

We say *that* 1 *is the multiplicative identity for rational numbers.*

Is 1 the multiplicative identity for integers? For whole numbers?

## THINK, DISCUSS AND WRITE



If a property holds for rational numbers, will it also hold for integers? For whole numbers? Which will? Which will not?

### 1.2.6 Negative of a number

While studying integers you have come across negatives of integers. What is the negative of 1? It is – 1 because $1 + (-1) = (-1) + 1 = 0$

So, what will be the negative of (–1)? It will be 1.

Also, $2 + (-2) = (-2) + 2 = 0$, so we say 2 is the **negative or additive inverse** of –2 and vice-versa. In general, for an integer $a$, we have, $a + (-a) = (-a) + a = 0$; so, $a$ is the negative of $-a$ and $-a$ is the negative of $a$.

For the rational number $\frac{2}{3}$, we have,

$$\frac{2}{3} + \left(-\frac{2}{3}\right) = \frac{2 + (-2)}{3} = 0$$

இதுபோன்ற கூட்டல்களை நீங்கள் ஏற்கனவே செய்திருப்பீர்கள். மேலும் சில கூட்டல்களை செய்வோம். நீங்கள் உற்றுநோக்கியது என்ன?

ஒரு முழு எண்ணுடன் 0 வை கூட்டுவதால் கிடைக்கும் கூட்டுத்தொகை மீண்டும் அதே முழு எண் என்பதை காணலாம். முழுக்கள் மற்றும் விகிதமுறு எண்களுக்கும் இவ்வாறே ஏற்படுகிறது.

பொதுவாக, $a + 0 = 0 + a = a$ இங்கு $a$ என்பது முழுஎண்

